தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, ஆனி 20, திருவள்ளுவர் ஆண்டு - 2049

2018 ஜூலை 4, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.”

என் குடிமக்களை உயர்த்துவேன் என்று மிகுந்த மன உறுதியுடன் முயற்சி செய்யும் ஒருவருக்கு, தெய்வமே வரிந்து கட்டிக்கொண்டு உதவி செய்வதற்காக அவர்முன் வந்து நிற்கும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 261, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

261—

கூடுதல் கட்டடம்

***2963—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, திருநாரையூர் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, திருநாரையூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்காக 128.77 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களினுடைய வாழ்வாதாரமான காவேரி உரிமையைக் காக்க சட்டப் போராட்டம் நடத்தி, மத்திய அரசிதழில் வெளியிடச் செய்த வெற்றித் திருமகள், பொன்னியின் செல்வி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்மலர் பாதங்களைப் பணிவோடு வணங்கி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாசியோடு காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க அறவழியில், நல்வழியில், நீதிமன்றம்மூலம் போராடி, வென்றெடுத்து, காவேரி மேலாண்மை வாரியத்தின் முதல் கூட்டத்திலேயே தமிழகத்திற்கு 31.24 டி.எம்.சி. அடி தண்ணீரைப் பெற்றுத் தந்த, தமிழக மக்கள் மற்றும் காவேரி டெல்டா பகுதி மக்களினுடைய பாதுகாவலரும், விவசாயிகளினுடைய நலன் காத்த ஏழைகளின் ஏந்தலும், கொங்கு சீமை கொள்கைத் தங்கம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எளிமையின் தோற்றமாக, இனிமையின் உருவமாக, தென்பாண்டித் தங்கமாகத் திகழ்கிற மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) வழக்கறிஞர் குழுவிற்கு உற்ற துணையாக இருந்து கடமையாற்றிய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அண்ணன் சி.வி.எஸ். அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நெஞ்சார்ந்த நன்றியை என்னுடைய சார்பாகவும், பாசனப் பகுதி மக்களினுடைய சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரரும், சமூக நீதிக்காகப் பாடுபட்டவரும், அனைத்து சமூக மக்களையும் அரவணைத்துச் செல்லும் வழிகாட்டியாக விளங்கியவரும், மேனாள் அமைச்சரும், எங்கள் மாவட்டத்திற்குப்

பெருமை சேர்த்த பெரியவருமான திரு. எஸ்.எஸ். இராமசாமி படையாச்சியார் அவர்களுடைய பிறந்த தினமான செப்டம்பர் மாதம் 16 ஆம் நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என அறிவித்த (மேசையைத் தட்டும் ஒலி) சமூக நீதி காத்த வீராங்கனை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மறு வடிவமாக விளங்குகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய சார்பாகவும், மாவட்ட மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், ஒரு கேள்வி மட்டும் கேளுங்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, திருநாரையூர் ஊராட்சியில் நிதி ஒதுக்கீடு செய்து, மிகுந்த சிறப்போடு கட்டடம் கட்டப்பட்டு வருகிறது என்ற மகிழ்ச்சியான தகவலை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

கடந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தகுதி உயர்த்தப்பட்ட ஸ்ரீமுஷ்ணம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களும், சுற்றுச் சுவரும் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டிருப்பதால், அதற்கான புதிய கட்டடங்கள், அடிப்படை வசதிகள் அனைத்தையும் செய்து தர வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு அது நபார்டு திட்டத்திலே இணைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கானூர் ஊராட்சியிலே அமையப்பெற்றிருக்கிற கானூர் அரசு மேல்நிலைப் பள்ளி, குமராட்சியில் அமையப்பெற்றிருக்கிற குமராட்சி அரசு மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகள் மிகச் சிறப்பான பள்ளிகளாக, ஏழையெளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணாக்கர்கள் கல்வி பயில்கின்ற பள்ளிகளாக இருக்கின்றன. அந்தப் பகுதி மாணாக்கர்களுடைய நலன் கருதி, கூடுதல் வகுப்பறைக் கட்டடமும், சுற்றுச் சுவரும் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கானூர் பகுதியில் உள்ள பள்ளியைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அந்தப் பள்ளியை மிக விரைவிலே நான் காண வருகிறேன். அங்கு சுற்றுச் சுவர் தேவை என்று குறிப்பிட்டார். அங்கிருக்கக்கூடிய பெற்றோர்–ஆசிரியர் சங்கத்தின் மூலமாக அதனைக் கட்டித் தருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

முற்பகல் 10–05

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கடந்த ஆண்டே உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. கடந்த ஆண்டு அதைச் செய்ய முடியாத நிலையிலே அது விடுபட்டுவிட்டது. லால்குடி தொகுதி, கானக்கல் கிராமம் மற்றும் திருச்சி மேற்குத் தொகுதியைச் சார்ந்த

எடமலைப்பட்டிபுதூர், இந்த இரண்டு வட்டங்களிலே மட்டும் கிட்டத்தட்ட 40,000 மக்கள் வசிக்கிறார்கள். கடந்த ஆண்டு நீங்கள்தான் நடுநிலைப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தந்திருக்கிறீர்கள். இந்த ஆண்டு அதை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித்தர வேண்டுமென்ற ஒரு கோரிக்கையும் உங்களிடம் வைக்கப்பட்டிருக்கிறது. மணப்பாறை தொகுதியிலே வி. பூசாரிப்பட்டி என்ற கிராமம் உள்ளது. முழுக்க முழுக்க மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கிற பகுதி; அந்தப் பகுதியிலே உள்ள பள்ளியைத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்பதற்காக 2 இலட்சம் ரூபாய் பணம் கட்டி 3 ஆண்டுகளாகிவிட்டன. அந்தப் பகுதியில் இருக்கும் பள்ளியையும் மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தருவாரா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு அவர்கள் பள்ளிகளைத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நேர்மையாக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் இந்த அரசு உங்கள் தொகுதியில் ஒரு பள்ளியைத் தரமுயர்த்தித் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

திருமதி வி. கஸ்தூரி வாசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தங்கத் தாரகை அம்மா அவர்களை வணங்கி, அம்மா வழியில் அரசை நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், அவர்களுக்கு துணை நிற்கின்ற துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, எங்களுடைய மாவட்டத்தை இந்த மாநிலத்திலேயே முதன்மை மாவட்டமாகக் கொண்டுவர முயற்சி மேற்கொண்டிருக்கின்ற எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

வால்பாறை தொகுதி, ஆனைமலையில் வி.ஆர்.டி. பெண்கள் மேல்நிலைப் பள்ளி உள்ளது. இந்தப் பள்ளியில் தமிழ்வழிக் கல்வி ஆறாம் வகுப்பு முதல் +2 வரையும், ஆங்கிலவழிக் கல்வி ஆறாம்

வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையும் உள்ளது. தற்போது இந்தப் பள்ளியில் பெற்றோர்–ஆசிரியர் சங்கத்தின் மூலமாக ஆங்கிலவழிக் கல்வி 11 ஆம் வகுப்பிற்கு தொடங்கப்பட்டுள்ளது. ஆகவே, இங்கு வகுப்பறைகள் அதிகமாக தேவைப்படுகின்றன. எனவே, வகுப்பறைகளையும், கழிப்பிடங்களையும் கட்டித் தர ஆவன செய்ய வேண்டுமென மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வால்பாறை தொகுதியிலே இருக்கிற பெண்கள் மேல்நிலைப் பள்ளியைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அந்த மேல்நிலைப் பள்ளியில் ஆங்கிலவழிக் கல்வியும் கூடுதலாக உள்ளது. ஆகவே, வகுப்பறைகள் கூடுதலாக தேவையென்ற கோரிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக அரசு பரிசீலித்து, நடவடிக்கை மேற்கொள்ளும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 262, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

262—

நியாய விலைக் கடைகளைப் பிரித்தல்

***34580—திரு. எம்.கே. மோகன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா நகர் தொகுதி, 102–வது வட்டம், குஜ்ஜி தெருவிலுள்ள சிந்தாமணி கூட்டுறவு நியாய விலைக் கடை எண் DB017–ஐப் பிரித்து இரு கடைகளாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*